# வேதாகமக் கல்லூரிகள் வேலைக்குதவாத வெறும் கல்லுகளா?[1]

## வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்

வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருப்பதினாலும்,[2] தேவனே தம்முடைய ஆவியானவர் மூலம் வேதசத்தியங்களை மனிதருக்குப் போதிப்பவராக இருக்கின்றார் என்பதினாலும் (யோவா. 16:13),[3] வேதாகமக் கல்லூரிகள் எல்லாம் வேலைக்குதவாத வெறும் கல்லுகள்தான் என்னும் கருத்து காலாகாலமாக கிறிஸ்தவ உலகத்தில் இருந்து வந்துள்ளது. இதனால், தற்காலத்திலும், பரிசுத்தாவியானவரே நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார் என்னும் எண்ணத்தில், பல கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை முறைப்படி படிக்கத் தேவையில்லை என்று வாதிடுவதோடு, ஆவியானவரே தங்களுக்கு சகல சத்தியங்களையும் போதிக்கின்றார் என்று பெருமிதம் கொள்பவர்களாகவும் இருக்கின்றனர். இதனால், தாங்கள் எந்தக் கல்லூரியின் வாசலிலும் கால் வைக்காத போதிலும் கர்த்தர் தங்களுக்கு சகலத்தையும் வெளிப்படுத்துகிறார் என்றும், வேதாகமக் கல்லூரிகளுக்குப் போகாதவர்களே வல்லமையாய் வசனத்தைப் பிரசங்கிக்கிறார்கள் என்றும் இவர்கள் கூறுகின்றனர். ஆனால், ஆவியானவரின் வெளிப்பாடு என்று இவர்கள் போதிப்பவைகளில் பல விஷயங்கள் வேதாகமத்தை முரண்படுத்தும் செய்திகளாக இருப்பதோடு, "ஆவிக்குரிய அர்த்தம்" என்று ஒவ்வொருவரும் புதுப் புது அர்த்தங்களை வேதவசனங்களுக்கு கொடுத்து வருகின்றனர். அதேசமயம், வேதாகமக் கல்லூரிகளும் ஏதாவதொரு "பாரம்பரிய உபதேசக் கோட்பாடு" என்னும் உறுதியான கோட்டைக்குள்ளேயே குடியிருக்கின்றன. இதனால், வேதாகமக் கல்லூரிகளிலும் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இதற்காக வேதாகமக் கல்லூரிகளே தேவையில்லை என்றும் அவைகள் எவ்வித வேலைக்கும் உதவாத வெறும் கல்லுகளே என்றும் கூறமுடியாது. இதனால், தேவன் எப்படி ஆவியானவரின் மூலம் நமக்கு வேதாகம சத்தியங்களைக் கற்றுத் தருகின்றார் என்பதையும், இதில் வேதாகமக் கல்லூரிகளின் பங்கு எந்த அளவுக்கு அவசியமானது என்பதையும் இக்கட்டுரையில் ஆராய்ந்து பார்ப்போம்.

### (1). போதகர்கள் மூலமே போதிக்கப்படுகின்றோம்

தேவனே தம்முடைய ஆவியானவர் மூலம் வேதாகமத்தை மனிதருக்குப் போதிக்கின்றார் என்றாலும், அவர் இதைப் போதகர்கள் மூலமே செய்கின்றார் என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாது. இதனால்தான் "போதக வரம்" பரிசுத்தாவியானவர் சபைகளுக்கு அருளும் வரங்களில் ஒன்றாக உள்ளது (1கொரி.12:28). மேலும், வேதாகமத்தை வாசிக்கும்போது, அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை எல்லோராலும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தாலும், வேதாகம சத்தியங்களை சரியானவிதத்தில் அறிந்துகொள்வதற்கு வேதாகம போதகர்களின் பணி அவசியமானதாயுள்ளது. இல்லையென்றால், வாராவாரம் ஆலய ஆராதனைகளில் பிரசங்கம்கூட தேவையில்லை என்றும் கூறவேண்டும். (தற்காலத்தில் பல சபைகளில் வேதாகம சத்தியங்கள் பிரசங்கிக்கப்படுவதில்லை என்பது வேறு விஷயம்). ஆனால், வேதாகமம் போதிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய ஒரு கட்டளையாகவே உள்ளது. இதனால்தான், இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களை ஊழியத்திற்கு அனுப்பும்போது, சகல ஜாதியினரையும் சீஷராக்கி, "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு

---

[1] 2021ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிள்ள பாரீஸ் நகரில் நடைபெற்ற "ஆமென் வேதாகமக் கல்லூரியின்" இரண்டாவது பட்டமளிப்பு விழாவின் நூலுக்காக எழுதப்பட்ட கட்டுரை இது.

[2] வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதற்கான ஆதாரங்களை அறிந்துகொள்வதற்கு, எனது "வேதாகமம் தேவனுடைய வார்த்தையா?" என்னும் நூலையும், வேதாகமத்தைப்பற்றிய சத்தியங்களை அறிந்துகொள்வதற்கு "மனுக்குலத்திற்கான மகத்தான் வெளிப்படுத்தல்" என்னும் நூலையும், வேதாகமப் புத்தகங்கள் எழுதப்பட்டு, ஒன்றாகத் தொகுக்கப்பட்டு, உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட வரலாற்றை அறிந்துகொள்வதற்கு "புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு" என்னும் நூலையும் பார்க்கவும்.

[3] யோவான் 16:13இல் "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" என்று இயேசுகிறிஸ்து வாக்களித்துள்ளார்.

உபதேசம் பண்ணுங்கள்'' (மத்.28:20) என்று அறிவுறுத்தியுள்ளார். எனவே, தேவன் நேரடியாகத் தம்முடைய ஆவியானவர் மூலமே வேதாகம சத்தியங்களை மனிதருக்குப் போதிக்கின்றார் என்றால், இக்காரியத்தைச் செய்யும்படி இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களுக்குக் கட்டளையிட்டிருக்க மாட்டார். ஆனால், "போதகப்பணி, இயேசுகிறிஸ்துவின் முக்கியமான ஒரு கட்டளையாக உள்ளது."[4] இதனால்தான், முதல் நூற்றாண்டில் இரட்சிக்கப்பட்டு சபையில் "சேர்க்கப்பட்டவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருந்தார்கள்'' (அப்.2:42).[5]

"அப்போஸ்தலருடைய உபதேசம்'' என்பது இயேசுகிறிஸ்துவினால் அவருடைய சீடர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு,[6] பரிசுத்தாவியானவரின் உதவியினால் அவர்கள் போதித்த சத்தியமாகும். ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் சீடர்களான அப்போஸ்தலர்கள்,[7] அவருடைய அறிவுறுத்தலின் படியே "ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருந்தார்கள்'' (அப்.6:4). இதைப்போலவே, "இயேசுகிறிஸ்துவின் போதனைகள் அனைத்தும் உலகத்தின் முடிவுபரியந்தம் சகல ஜனங்களுக்கும் போதிக்கப்படவேண்டும். ஏனெனில், அவற்றில் எதுவுமே தற்காலத்திற்குத் தேவையற்றதாகவோ, பொருத்தமற்றதாகவோ போய்விட வில்லை."[8] இதனால்தான், "வேதாகம சத்தியங்களைப் போதிப்பவராக இருந்த இயேசுகிறிஸ்து,[9] உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் தம்முடைய போதகப் பணியைத் தொடர்ந்து செய்வதற்காகத் தம்முடைய சீடர்களைப் போதகர்களாக்கியுள்ளார்."[10] மேலும், இயேசுகிறிஸ்து செய்யத் தொடங்கிய பணியின் தொடர்ச்சியாகவே அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் இருப்பதாக அதை எழுதிய லூக்கா குறிப்பிட்டுள்ளார் (அப்.1:2).[11] எனினும், அப்போஸ்தலர்கள் தங்களுடைய அறிவிலும் அனுபவத்திலும் கற்பனையிலும் உருவாக்கியவைகளை அல்ல, இயேசுகிறிஸ்து போதித்தவைகளையே மற்றவர்களுக்கு கற்பிக்க வேண்டியவர்களாக இருந்தனர்.[12] இதனால்தான், அப்போஸ்தலனாகிய பவுலும், "தன்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனிதர்களிடத்தில் ஒப்புவிக்கும்படி'' தீமோத்தேயுவுக்கு கட்டளையிட்டதோடு (2தீமோ.2:2), சபையில் வேதாகமத்தை "வாசிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிருக்கும்படியும்'' (1தீமோ.4:13)[13] "சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும்'' (2தீமோ.2:15), "ஜாக்கிரதையாய்

---

[4] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 749.

[5] அப்போஸ்தலர் 2:42இல், "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[6] இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில், வேதாகம சத்தியங்கள் அனைத்தையும் தம்முடைய சீடர்களான அப்போஸ்தலருக்கு கற்பித்ததோடு, தாம் அவர்களைவிட்டுப் பரலோகத்திற்குச் சென்ற பின்னர், தாம் கற்பித்த அனைத்தையும் பரிசுத்தாவியானவர் அவர்களுக்கு நினைவூட்டுவார் என்றும் வாக்களித்திருந்தார்.

[7] இயேசுகிறிஸ்துவின் பன்னிரு சீடர்களும் அவருடைய அப்போஸ்தலர்களாக இருந்தனர். ஏனெனில், இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களில் பன்னிருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பெயரிட்டிருந்தார் (லூக்.6:13). ஏனெனில், அவர் இவர்களைத் "தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார் (மாற்.3:14-15). அதாவது தம்முடைய அதிகாரத்தை உடைய தமது பிரதிநிதிகளாக அவர்களை ஏற்படுத்தினார்.

[8] D.A.Carson, *Matthew: The Expositor's Bible Commentary Volume 8*, p. 599.

[9] மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவின் போதகப் பணியைப்பற்றி 4:23, 5:2, 7:29, 9:35, 11:1, 13:34, 21:23, 26:55 என்னும் வசனங்கள் அறியத்தருகின்றன.

[10] D.A.Hagner, *Matthew 14-28: Word Biblical Commentary Volume 33*, p. 888.

[11] அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை எழுதும் லூக்கா, தான் அதற்கு முன்பு எழுதிய சுவிசேஷப் புத்தகத்தில் எதைப்பற்றி எழுதினேன் என்று கூறும்போது, இயேசுகிறிஸ்து "எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன்'' (அப்.1:2) என்று குறிப்பிட்டுள்ளார். எனினும் மூலமொழியில் "தொடங்கின'' என்னும் சொல்லுக்கே இவ்வசனத்தில் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், சுவிசேஷப் புத்தகத்தில் இயேசுகிறிஸ்து செய்யத் தொடங்கிய பணியின் தொடர்ச்சியாகவே அப்போஸ்தருடைய ஊழியம் இருப்பதை இதன் மூலம் லூக்கா அறியத்தருகின்றார் (J.R.W.Stott, *The Message of Acts: The Bible Speaks Today Commentary*, p. 32; S.D.Toussaint, *Acts: The Bible Knowledge Commentary – New Testament*, p. 353; D.L.Bock, *Acts: Baker Exegetical Commentary on the New Testament*, p. 52; D.G.Peterson, *Acts: The Pillar New Testament Commentary*, pp. 99,102; C.S.Keener, *Acts: An Exegetical Commentary*, p. 647; W.Barclay, *Acts: The New Daily Study Bible Commentary*, p. 9).

[12] R.T.France, *Matthew: The New International Commentary on the New Testament*, p. 1118.

[13] 1தீமோத்தேயு 4:13இல், உள்ள மூன்று காரியங்களும், அதாவது வாசித்தல், புத்திசொல்லுதல், உபதேசித்தல் என்பவைகள் வேதாகமத்தை வாசிப்பதையும், அதிலிருந்து புத்திசொல்வதையும், அதை உபதேசிப்பதையும்பற்றிய அறிவுறுத்தலாகும்.

திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணுகிறவனாயும்'' (2தீமோ.4:2) இருக்கும்படி அறிவுறுத்தியுள்ளார். இதைப்போலவே தற்காலத்திலும், இயேசுகிறிஸ்துவினால் அவருடைய சீடர்களுக்கு அருளப்பட்டு, அவர்களால் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள அப்போஸ்தலருடைய உபதேசங்களைப் போதிப்பதற்குத் தேவன் சபையில் மேய்ப்பர்களையும் போதகர்களையும் ஏற்படுத்தியுள்ளார். ஏனெனில், "சபைக்கு வெளியில் சுவிசேஷத்தை அறிவிப்பதும், சபைக்கு உள்ளே வேதாகம சத்தியத்தைப் போதிப்பதுமே சபை ஊழியத்தின் நடைமுறையாக இருக்க வேண்டும்.''[14]

போதகர்கள் மூலம் வேதாகம சத்தியத்தைப் போதிப்பதே தேவனுடைய நடைமுறையாய் இருப்பதினால்தான், போதக வரத்தைத் தேவன் சபையின் மேய்ப்பர்களுக்கு கொடுத்துள்ளார். மேலும், சபையில் போதகர்களின் பணி தனியானதாக இருந்தாலும் (அப்.13:1),[15] மேய்ப்பர்களாக இருப்பவர்கள் போதகர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதை சபையின் ஊழியப் பணிகளைப் பற்றி எழுதும்போது பவுல் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால்தான், சபையின் ஒவ்வொரு ஊழியத்தையும் குறிப்பிடும்போது "சிலர்'' என்னும் சொல்லைச் சேர்த்துள்ள பவுல், மேய்ப்பர்களுக்கும் போதகர்களுக்கும் இடையில் சிலர் என்னும் சொல்லைக் குறிப்பிடாமல், "சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்'' (எபே.5:13) என்று எழுதியுள்ளார். ஏனெனில், "மேய்ப்புப் பணியும் போதகப் பணியும் தனியொரு ஊழியமாகவே உள்ளது.''[16] அதாவது, மேய்ப்பராக இருப்பவர் போதரகராகவும் இருக்கின்றார். ஏனெனில், மேய்ப்பர்கள் மூலமே தேவன் சபைக்குப் போதனைகளைக் கொடுக்கின்றார். இதனால்தான், வெளிப்படுத்தல் புத்தகத்தில் சபை மக்களுக்கு ஆவியானவரால் கொடுக்கப்படும் செய்திகள் (வெளி.2:7, 2:11, 2:17, 2:29, 3:6, 3:13, 3:22)[17] சபையின் மேய்ப்பருக்கு கொடுக்கப்பட்டன. ஆனாலும், வேதாக மத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள், வெளிப்படுத்தல் 2:7, 2:11, 2:17, 2:29, 3:6, 3:13, 3:22 என்னும் வசனங்களில் "செய்தியாளன்'' என்று மொழிபெயர்க்கப்படவேண்டிய "ஏன்ஜலொஸ்'' (*angelos*) என்னும் கிரேக்கச் சொல்லைத் "தூதன்'' (angel) என்று குறிப்பிட்டுள்ளதினால், ஆவியானவரால் கொடுக்கப்படும் செய்திகள் யாருக்கு கொடுக்கப்படுகின்றன என்பதை அநேகரால் அறியமுடியாமல் உள்ளது.

வேதாகமத்தில் "தூதன்'' என்னும் சொல் தேவதூதர்களை மாத்திரமல்ல, "தூதுவன்'' அல்லது "செய்தியாளன்'' என்னும் அர்த்தத்தில் மனிதர்களைக் குறிப்பிடுவதற்கும் உபயோகிக்கப்பட் டுள்ளது. ஏனெனில், இச்சொல்லுக்கு இவ்விரு அர்த்தங்களும் உள்ளன. இதனால்தான், மத்தேயு 11:10, லூக்கா 7:24, 9:52, யாக்கோபு 2:25 என்னும் வசனங்களில் தூதன் என்னும் சொல் மனிதர்களைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது.[18] இதைப்போலவே, வெளிப்படுத்தல் 2:1, 2:8, 2:12, 2:18, 3:1, 3:7, 3:14 என்னும் வசனங்களில் "சபைகளின் தூதர்களுக்கு'' எழுதும்படியான அறிவுறுத்தல், சபையின் மேய்ப்பர்களுக்கு எழுதும்படியான கட்டளையாகவே உள்ளது. ஏனெனில், "மேய்ப்பர்களே சபைகளில் தேவனுடைய செய்தியை அறிவிப்பவர்களாக இருக்கின்றனர்.''[19] உண்மையில், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய வார்த்தையை

---

[14] C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, p. 433.

[15] அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள் (அப்.13:1).

[16] J.R.W.Stott, *The Message of Ephesians*, p. 163.

[17] வெளிப்படுத்தல் புத்தகத்தில் ஏழு சபைகளுக்கும் கொடுக்கப்பட்ட செய்திகளிலும் "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'' என்னும் குறிப்பு உள்ளது.

[18] மத்தேயு 11:10இல் "இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன் அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம்பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்'' என்று யோவான் ஸ்னானனைத் தூதன் என்றும், லூக்கா 7:24இல் "யோவானுடைய தூதர்கள் போனபின்பு அவர் யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது'' என்னும் வசனத்தில் யோவானின் தூதர்கள் என்பது யோவானால் அனுப்பப்பட்டவர்கள் என்றும், லூக்கா 9:52இல் "தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள்'' என்பதில், இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் தூதர்கள் என்றும், யாக்கோபு 2:25இல் "அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது'' என்னும் வாக்கியத்தில் வேவுகாரர்களே தூதர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

[19] J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, p. 49; C.R.Swindoll, *Revelation: Living Insights New Testament Commentary*, p. 27;

மக்களுக்குப் போதித்த ஆசாரியர்கள் தூதன் என்று அழைக்கப்பட்ட விதமாகவே (மல்.2:7),[20] வெளிப்படுத்தலில் தேவனுடைய செய்தியை சபைக்கு அறிவிக்கும் மேய்ப்பர்கள் சபையின் தூதர்களாக, அதாவது செய்தியாளர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதனால்தான், புதிய ஆங்கில மொழிபெயர்ப்புகளில் செய்தியாளன் messenger என்னும் சொல்லே இவ்வசனங்களில் உள்ளது. மேலும், கிரேக்க இலக்கியங்களிலும் இத்தகைய அர்த்தத்திலேயே இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[21] இதனால்தான், கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் எழுதப்பட்ட ஒரு கிறிஸ்தவ நூலிலும் சபை மேய்ப்பனுடைய பணியைக் குறிப்பிடுவதற்கு செய்தியாளன் என்னும் அர்த்தத்தில் ஏன்ஜலொஸ் என்னும் சொல் உள்ளது.[22] ஏனெனில், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஊடாகவே வேதாகம சத்தியங்களை, போதகர்களாக இருக்கின்ற மேய்ப்பர்கள் மூலம் சபைக்கு கொடுக்கின்றார். இதனால்தான், தற்கால சபையின் தீர்க்கதரிசனப் பணி ராஜ்யங்களுக்கு அறிவிக்கப்படும் செய்திகளாக இராமல், மேய்ப்பனுக்குக் கீழாக இருந்து 1கொரிந்தியர் 14:3இன்படி செய்யப்படும் ஊழியமாகவே உள்ளது.[23]

## (2). போதகர்கள் முதலில் போதிக்கப்படவேண்டும்

போதகர்களாக இருக்கும் மேய்ப்பர்கள் வேதாகம சத்தியங்களை மக்களுக்குப் போதிப்பவர் களாய் இருப்பதினால், போதகர்களாக இருப்பவர்கள் முதலில் போதிக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாய் உள்ளது. அதாவது, அவர்கள் வேதாகம சத்தியங்களை சரியான விதத்தில் கற்றறிந்தவர்களாக இருக்கவேண்டும். மேலும், கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் தனிப்பட்ட ரீதியாகத் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தை அன்றாடம் வாசித்துத் தியானிப்பவர்களா கவும் (சங்.1:2)[24] கிரமமான முறையில் ஆராய்ந்து படிக்கிறவர்களாகவும் (யோவா.5:39, ஏசா.34:16)[25] இருக்கவேண்டியது அவசியம் என்றாலும், வேதாகமத்தைப் போதிப்பவர்கள் அவர்களைவிட வேததியானத்திலும் ஆராய்ச்சியிலும் அதிக நேரம் செலவிடவேண்டியது அவசியம். ஏனெனில், போதகர்களாக இருக்கும் மேய்ப்பர்கள் "போதக சமர்த்தனாக" இருக்க வேண்டும் என்றும் (1தீமோ.3:2),[26] இதற்கு அவர்கள் "வேதவாக்கியங்களின்படி போதிப்பவர்களாக" (1பேது.4:11)[27] இருக்க வேண்டும் என்றும் வேதாகமம் கூறுகிறது. இதனால்தான், "நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு" (2தீமோ.3:14) என்று தீமோத்தேயு அறிவுறுத்தப்பட்டுள்ளான். எனினும், தீமோத்தேயு பவுலின் மூலம் கற்றுக்கொண்டது போல (2தீமோ.3:14)[28] வேதாகம சத்தியங்களை முறைப்படி முழுமையாக அறிந்துகொள்ளக்கூடிய

---

[20] மல்கியா 2:7இல் "ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும். வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே. அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[21] Homer, *Iliad*, 22.438; Euripides, *Medea*, 1120-1230; 1Macc.1:44. யூதர்களின் நம்பிக்கையை ஆதாரமாகக்கொண்டு வெளிப்படுத்தல் 2:1, 2:8, 2:12, 2:18, 3:1, 3:7, 3:14இல் குறிப்பிடப்பட்டுள்ள தூதனைச் சிலர் சபையின் பாதுகாப்புத் தூதனாகக் கருதுகின்றனர் (C.S.Keener, *Revelation: The NIV Application Commentary*, p. 100). ஆனால், சபைக்கு செய்திகள் தேவதூதர்கள் மூலமாகக் கொடுக்கப்படுவதில்லை என்பதினால் இவ்விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

[22] *Shepherd of Hermas*, 2.8.3.

[23] 1கொரிந்தியர் 14:3இல் "தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[24] "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று சங்கீதம் 1:2 கூறுகிறது.

[25] "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்" என்று யோவான் 5:39இலும் "கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்" என்று ஏசாயா 34:16இலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[26] 1தீமோத்தேயு 3:2இல் "கண்காணியாய் இருப்பவன் போதகசமர்த்தனாய் இருக்கவேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் மூப்பன், கண்காணி என்னும் சொற்கள் சபையின் மேய்ப்பனையே குறிக்கின்றன. இதனால்தான், எபேசு பட்டணத்திலிருந்த சபைகளின் மூப்பர்களுடன் (அப்.20:17) பேசும்போது, "உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்று அறிவுறுத்தியுள்ளார். அதாவது மூப்பர்களே சபையை மேய்ப்பதற்கான கண்கானிகள் என்று பவுல் குறிப்பிட்டுள்ளார்.

[27] 1பேதுரு 4:11இல், "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[28] இதனால்தான், 1தீமோத்தெயு 3:14இல் "நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு" என்று அறிவுறுத்தும் பவுல், "அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறாய்" என்றும்

வசதியும் வாய்ப்பும் பெரும்பாலான மேய்ப்பர்களுக்கும் போதகர்களுக்கும் இல்லாதிருப்பதி னாலேயே வேதாகமக் கல்லூரிகள் உருவாகியுள்ளன. ஆனால், ஆரம்பத்தில் இயேசுகிறிஸ்துவே சீடர்களுக்கு வேதாகம சத்தியங்கள் அனைத்தையும் போதித்ததினாலும், ஆரம்பகால சபைகளில் அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்து தங்களுக்கு கற்பித்தவைகளை முறைப்படி மற்றவருக்கு கற்பித்ததினாலும் அக்காலங்களில் வேதாகமக் கல்லூரிகள் தேவைப்படவில்லை. ஆனால், பிற்காலத்தில் சபைகளின் எண்ணிக்கை அதிகரித்ததினால், தனிப்பட்டரீதியாக ஒவ்வொரு சபையிலும் ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கும், வேதாகமத்தைப் போதிப்பதற்கும் போதுமான வசதிகள் இல்லாதிருந்ததினால், வேதாகமக் கல்லூரிகள் உருவாகின. மேலும், வேதாகமப் புத்தகங்கள் எழுதப்பட்ட காலத்தில் அதை வாசித்தவர்களின் வாழ்வுச் சூழலிலும் மொழிகளிலும் வேதாகமம் இருந்ததினால், அவர்களினால் வேதாகமத்தில் எழுதப்பட்டவைகளை இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாயிருந்தது. ஆனால், பழைய ஏற்பாடு எழுதப்பட்ட எபிரெய மொழியும் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மொழியும் நாம் அறியாத அந்நிய மொழிகளாக இருப்பதோடு, நம்மிடம் இவற்றின் தமிழ் அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பே உள்ளது. மேலும், வேதாகமம் எழுதப்பட்டதற்கும் நமக்கும் இடையில் நீண்டகால இடைவெளி இருப்பதினால்,[29] வேதாகமச் சொற்கள் அக்காலத்தில் எத்தகைய அர்த்தம் உடையவைகளாய் இருந்தன என்பதையும், அவைகள் எத்தகைய கலாசார சூழலில் எவ்வாறு உபயோகிக்கப்பட்டன என்பதையும் அறியாதவர்களாய், தற்காலத்தில் பலர் தாங்கள் வாழும் பிரதேச கலாசார சூழலில் வேதாகமத்தைத் தவறாகப் புரிந்துகொள்கின்றனர். மேலும், பெரும்பாலானவர்கள் வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசங்களையும், வேதாகமப் புத்தகங்களின் வித்தியாசமான இலக்கியத் தன்மைகளையும் அறியாதவர்களாக எல்லாவற்றையும் ஒரே விதமாகத் தவறாக வியாக்கியானம் செய்கின்றனர்.[30] இதனால்தான், வேதாகமப் புத்தகங்களின் மொழிநடை, அவற்றின் பின்னணி, உபதேசம் என்பவற்றை சரியானவிதத்தில் அறிந்து கொள்வதற்கு வேதாகமக் கல்லூரிகள் தேவைப்படுகின்றன.

வேதாகமக் கல்லூரிகள் தேவையில்லை என்று கூறுபவர்கள் தங்களுடைய தர்க்கத்திற்கு ஆதாரமாக சில வேதவசனங்கயையும் காண்பிப்பது வழக்கம். ஆனால், இவர்கள் காண்பிக்கும் வசனங்களுக்கு இவர்கள் கொடுக்கும் விளக்கமே, இவர்கள் குறிப்பிட்ட அந்த வசனங்களின் அர்த்தத்தை அறியாதவர்களாக இருப்பதை வெளிப்படுத்துகிறது. உதாரணத்திற்கு, இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களை ஊழியத்திற்கு அனுப்பும்போது, ‘‘எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள். நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்’’ (மத்.10:19-20) என்று தெரிவித்தார். இதனால், பிரசங்கிப்பதற்கும், வேதத்தைப் போதிப்பதற்கும் எவ்வித ஆயத்தமும் தேவையில்லை என்றும், தேவையான வார்த்தைகளை பிரசங்கிக்கும் நேரத்தில் ஆவியானவர் தங்களுக்குத் தருகிறார் என்றும் கூறிவிட்டு, வாயில் வருவதை எல்லாம், அல்லது குறிப்பிட்ட அந்த வாரத்தில் நடந்ததை எல்லாம் போதனையாக்குகிறவர்களாகவே பலர் காணப்படுகின்றனர். ஆனால், ‘‘மனுஷரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள். அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டுபோகப்படுவீர்கள்’’ (மத்.10:17-18) என்று சொல்லிவிட்டே ‘‘அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது: எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்’’ என்று இயேசுகிறிஸ்து கூறினார். எனவே, இது சுவிசேஷத்தை அறிவிப்பதையோ, தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதையோ, அல்லது வேதாகமத்தைப் போதிப்பதையோ பற்றிய ஆலோசனை அல்ல. ஏனெனில், சீடர்கள் கைது

---

குறிப்பிட்டுள்ளார். மேலும், திமோத்தேயு சிறுவயதிலிருந்தே வேதவாக்கியங்களை அறிந்திருந்தாலும் (2தீமோ.3:15) கிறிஸ்தவ மார்க்கத்தின் உபதேசங்கள் அனைத்தையும் அவர் பவுலின் மூலமே கற்றார்.

[29] வேதாகமத்தில் இருக்கும் 66 புத்தகங்கம், கி.மு.1500 இற்கும் கி.பி.100இற்கும் இடைப்பட்ட 1600 வருஷ கால இடைவெளியில் எழுதப்பட்டன.

[30] வேதாகமத்தில் இருக்கும் 66 புத்தகங்களும் ஒரேவிதமான மொழிநடையில் எழுதப்படவில்லை. இவற்றில் சரித்திரம், கவிதை, கட்டளை, தீர்க்கதரிசனம், உவமை என்று வித்தியாசமான இலக்கியத் தன்மையுள்ள புத்தகங்கள் உள்ளன.

செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, அதிகாரிகளினால் விசாரிக்கப்படும் நெருக்கடியான சூழலில் எப்படி பேசவேண்டும்? என்னத்தைப் பேசவேண்டும்? என்பதைப்பற்றி கவலைப்படவோ பயப்படவோ வேண்டாம், அப்படிப்பட்ட நேரங்களில் உங்களில் இருக்கிற பரிசுத்த ஆவியானவர் பேசுவார் என்றே இயேசுகிறிஸ்து இவ்வசனங்களில் குறிப்பிட்டுள்ளார்.[31] இதனால், பிரசங்கிக்கும் போதும் வேதாகமத்தைப் போதிக்கும்போதும் பரிசுத்தாவியானவர் பேசமாட்டார் என்று நாம் கருதலாகாது. ஏனெனில், பரிசுத்தாவியானவரின் உதவியுடனேயே வேதாகமத்தை நாம் ஆராய்ந்து படிக்கவேண்டும். ஆனால், பரிசுத்தாவியானவர் பேசுகிறார் என்பதற்காக இவ்வசனங்களை ஆதாரமாகக் கொண்டு, பிரசங்கத்திற்கும் வேதப்படிப்பிற்கும் எவ்வித ஆயத்தமும் ஜெபமும் வேத ஆராய்ச்சியும் தேவையில்லை என்று எண்ணுவதே தவறாகும்.[32] ஏனெனில், "நெருக்கடியான சூழ்நிலைகளில் நேரடியாகவே வார்த்தைகளை ஆவியானவர் தருவதினால், ஏனைய நேரங்களில் வேதாகமத்தை ஆராய்ந்து படிக்காமல் எவ்வித ஆயத்தமும் இல்லாத சோம்பேறிப் பிரசங்கிகளாக இருக்கலாம் என்பதற்கான அறிவிப்பு அல்ல இது."[33]

இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் படிப்பறிவற்றவர்கள் என்றும், இதனால் அவர்கள் ஆவியானவர் அருளிய வார்த்தைகளையே போதித்தார்கள் என்னும் கருத்தும் கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ளது. எனினும், சீடர்கள் ஆவியானவர் அருளிய வார்த்தைகளில் போதித்தார்கள் என்பது முற்றிலும் உண்மை. ஆனால், அவர்கள் படிப்பறிவற்றவர்கள், அவர்களுக்கு எழுதவோ வாசிக்கவோ தெரியாது என்பது உண்மை அல்ல. ஏனெனில், இது முதலாம் நூற்றாண்டு யூத சமுதாயத்தைப்பற்றிய எவ்வித அறிவும் இல்லாத முற்றிலும் தவறான ஒரு கருத்தாகும். ஆனாலும், இஸ்ரவேல் மக்கள் கானான் என்னும் தேசத்தில் தங்களுடைய வாழ்க்கையை ஆரம்பித்த காலத்தில்,[34] அவர்கள் மத்தியில் கல்விமுறை அதிகமாக வளர்ச்சியடைந்திருக்க வில்லை. ஏனெனில், ஆரம்ப காலத்தில் பிள்ளைகளின் வீடுகளே அவர்களுடைய பள்ளிக் கூடங்களாகவும் இருந்தன. மேலும், பிள்ளைகளுக்கு மூன்று வயதாகும் வரை அவர்கள் தாயினுடைய பொறுப்பின் கீழேயே இருந்தனர்.[35] ஆனால், அதன் பின்னர் ஆண் பிள்ளைகளுக்குத் தகப்பன் நியாயப்பிரமாணத்தையும் ஒரு தொழிலையும் கற்றுக்கொடுப்பான். பெண் பிள்ளைகள் தாயுடன் இருந்து வீட்டு வேலைகள் செய்யும் முறைகளைப் படித்தனர். ஆனால் பிற்காலத்தில், இஸ்ரவேலில் ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் பிள்ளைகளுக்கு மார்க்க காரியங்களையும் சரித்திரத்தையும், எழுதி வாசிக்கும் முறையையும் கற்பிக்கும் ஆசிரியர்களாக இருந்தனர். மேலும், யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலத்தில் அவர்கள் பாபிலோனிய கல்விமுறையின் சொல்வாக்கிற்கு உட்பட்டனர்.[36]

பாபிலோனியர்கள் பல பாடங்களை மாணவர்களுக்குக் கற்பித்தனர். இதனால், யூதர்கள் பாபிலோனிலிருந்து தங்களுடைய சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்த பின்னர்,[37] வேதபாரகர்கள்

---

[31] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, pp. 254-255. இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களை இஸ்ரவேல் மக்கள் வாழும் பட்டணங்களுக்கு அனுப்பும்போதே (மத்.10:1-6) இவ்வாறு கூறியதினால், அவர்களுக்கு அச்சமயம் சாதாரண மக்கள் மூலம் ஏற்படும் எதிர்ப்புகளை மாத்திரமல்ல, எதிர்காலத்தில் அரச அதிகாரிகள் மூலம் வரும் எதிர்ப்புகளையும் இதனோடு சேர்த்து வெளிப்படுத்தியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில், இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக அரச அதிகாரிகள் மூலமான எதிர்ப்புகள் (மத்.10:17-18) அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலும், அதற்குப் பின்பான சபை சரித்திரத்திலுமே உள்ளன (M.Rydelnik & M. Vanlaningham, *The Moody Bible Commentary*, p.1470; C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, p.174; D.L.Turner, *Matthew: Baker Exegetical Commentary on the Bible*, p. 276; M.J.Wilkins, *Matthew: The NIV Application Commentary*, pp. 391-393; C.S.Keener, *Matthew: The IVP New Testament Commentary*, p. 207).

[32] C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, p.175.

[33] R.T.France, *Matthew: The New International Commentary on the New Testament*, pp. 392-393.

[34] எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேல் மக்கள், கி.மு.1446ஆம் ஆண்டு எகிப்திலிருந்து வெளியேறி, 40 வருஷங்களின் பின்னர் தேவன் அவர்களுக்கு வாக்களித்த கானான் தேசத்தில் குடியேறினர்.

[35] இதனால்தான், மூன்று வயது வரை அன்னாள் சாமுவேலைத் தன்னிடத்தில் வைத்திருந்தாள். மேலும், அவள் பிள்ளையை பால் மறக்கப்பண்ணிய பின்பே தன்னுடைய பொருத்தனையை நிறைவேற்றினாள் என்று 1சாமுவேல் 1:21-24இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில். அக்காலத்தில் பிள்ளைக்கு மூன்று வயதாகும் வரை தாய்ப்பால் கொடுப்பது வழக்கம் (2மக்.7:27) (R.D.Bergen, *1,2 Samuel: The New American Commentary*, p. 72).

[36] கி.மு.586ஆம் ஆண்டு யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனார்கள்.

[37] யூதர்கள் 70 வருஷ கால பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து எஸ்றா நெகேமியா என்பவர்களின் காலத்தில் தங்களுடைய சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்தனர்.

நியாயப்பிரமாணத்தை மக்களுக்குக் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டனர்.[38] மேலும், யூதர்கள் பாபிலோனில் இருக்கும்போது அவர்கள் மத்தியில் உருவான "ஜெபாலய வழிபாட்டு முறை" அவர்கள் யூதேயாவுக்குத் திரும்பிவந்த பின்பும் தொடர்ந்தது. இது நியாயப்பிரமாணத்தை வாசித்து அதற்கு அர்த்தமும் விளக்கமும் கொடுக்கும் செயலுக்கு முக்கியத்துவம் கொடுத்த வழிபாட்டு முறையாக இருந்தது. பிற்காலத்தில் யூதர்கள் கிரேக்க கலாசாரத்தினதும் கல்வியினதும் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாகவும் இருந்தனர். கிரேக்கர்கள் தங்களுடைய பிள்ளைகள் ஏழு வயதாயிருக்கும்போது அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பினார்கள். பிள்ளைகளுக்கு அங்கு எழுதுவதற்கும், வாசிப்பதற்கும், எண்ணுவதற்கும் கற்றுக் கொடுக்கப்பட்டதோடு, கவிதை, இசை, நாடகம், விளையாட்டுகள் என்பனவும் பாடத்திட்டத்தில் இருந்தன. பிள்ளைகள் பதினாறு வயதை அடைந்த பின்பு அவர்கள் இலக்கியம், தத்துவம், அரசியல் என்னும் பாடங்களைப் படிப்பதற்கு உயர்கல்விக் கூடங்களுக்கு அனுப்பப்பட்டனர். கி.மு.164ல், எருசலேமில் கிரேக்கக் கல்வியை அறிமுகப்படுத்திய செலூக்கிய வம்ச அரசன் மரணமடைந்த பின்னர், பரிசேயர்கள் யூத ஆண்பிள்ளைகளுக்கு ஜெபாலயத்தின் மூலமான கல்வியை ஆரம்பித்தனர். இது கிரேக்க கல்வி முறையின்படி சிறுவர்களுக்கான ஆரம்பக் கல்வியையும், வாலிபர்களுக்கான உயர் கல்வியையும் உள்ளடக்கியிருந்தது. யூத ஆண் பிள்ளைகளுக்கு பத்து வயது வரை பழைய ஏற்பாடு கற்பிக்கப்பட்டது. பத்து முதல் பதினைந்து வயது வரை யூதர்களுடைய பாரம்பரியப் போதனைகளைக் கொண்ட யூத மார்க்கச் சட்டங்கள் கற்பிக்கப்பட்டன. அதன் பின்னர் திறமையான மாணவர்கள் மேற்படிப்புக்கு அனுப்பப்பட்டனர். மற்றவர்கள் தொழிற்கல்வியில் ஈடுபடுத்தப்பட்டனர்.[39]

முதலாம் நூற்றாண்டு யூத சமுதாயத்தில் ஆண்பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வி கொடுக்கப்பட்டது. ஏனெனில், யூதர்களுடைய ஜெபாலயங்கள் அவர்களுடைய பாடசாலைகளா கவும் இருந்தன. இதனால், யூத ஆண்கள் அனைவரும் பதினாறு வயதுவரை ஜெபாலயப் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்றவர்களாகவே இருந்தனர். ஆனால், அதன் பின்னர் படிப்பில் ஆர்வமும் திறமையும் உள்ளவர்கள் உயர் கல்வியைத் தொடர்ந்தனர். மற்றவர்கள் ஒரு தொழிலைக் கற்றனர். இதனால், இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் அனைவரும் பதினைந்து அல்லது பதினாறு வயது வரை ஜெபாலயப் பாடசாலைகளில் படித்தவர்களாகவே இருந்தனர். அதன் பின்பே அவர்கள் மீன்பிடித் தொழிலுக்குச் சென்றார்கள். மேலும், முதலாம் நூற்றாண்டு கலிலேயப் பட்டணங்களில் மீனவர்கள் மற்றவர்களைவிட செல்வந்தர்களாகவும், படித்தவர்களாகவும் இருந்தனர்.[40] இதனால், ஜெபாலயப் பள்ளிக் கூடங்களில் ஆரம்ப கல்வியைக் கற்று பின்னர் மீனவர்களாக இருந்த பேதுருவும் யோவானும் "படிப்பறியாதவர்களும் பேதமையுள்ளவர்களும்" என்று அப்போஸ்தலர் 4:13ல் குறிப்பிடப்பட்டிருப்பது அக்கால சமுதாய நிலைக்கு முரணான ஒரு பேச்சாகவே தென்படுகின்றது. மேலும், மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொற்கள் "முறைப்படி கற்காதவர்கள்" என்னும் அர்த்தத்தில் இருந்தாலும்,[41] சீடர்கள் "அக்கால வேதபாரகர்களின் கல்வியைப் பெறாதவர்கள்" என்பதையே சுட்டிக்காட்டுகிறது.[42] ஏனெனில், அக்கால யூத சமுதாயத்தில் வேதபாரகர்கள் படிக்கும் எருசலேம் நகரப் பள்ளியில் படித்தவர்கள் மாத்திரமே வேதவாக்கியங்களைப் போதிக்கவும், பிரசங்கிக்கவும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.[43] மேலும், எபிரெய மொழியில் எழுதவும் வாசிக்கவும் தெரிந்தவன்கூட வேதாகமத்தை யூதமார்க்கப் போதனைக்கு ஏற்ற விதத்தில் வியாக்கியானம் செய்யாவிட்டால் அவனையும் படிப்பறியாதவன் என்றே யூதர்கள் குறிப்பிட்டனர்.[44] இதைப்போலவே, "சாதுர்ய

---

[38] வேதபாரகரின் பணி எஸ்றாவின் காலத்தில் ஆரம்பமாகின. வேதாகமத்தின் பிரதிகளைத் தயாரிப்பதும்,

[39] R.Gower, *The New Manners and Customs of Bible Times*, pp. 76-86; A.Edersheim, *Sketches of Jewish Social Life*, pp. 115-128; E.Ferguson, *Backgrounds of Early Christianity*, pp. 100-103; A.A.Bell, *Exploring the New Testament World*, pp. 238-240.

[40] S.Freyne, *Galilee, Jesus, and the Gospels: Literary Approaches and Historical Investigations*, p. 241 (Fortress 1988). G.N.Stanton, *Gospel Truth? New Light on Jesus and the Gospels*, Valley Forge: Trinity Press International, 1995.186.

[41] J.B.Polhill, *Acts: The New American Commentary*, p. 145.

[42] C.S.Keener, *Acts: An Exegetical Commentary Volume 2*, p. 1154; L.T.Johnson, *The Acts of the Apostles: Sacra Pagina Commentary*, p. 78.1992.

[43] C.K.A Barrett, *A Critical and Exegetical Commentary on the Acts of the Apostles*, pp. 233-234; J.B.Green & L.M.McDonald, ed., *The World of the New Testament: Cultural, Social, and historical Contexts*, p. 191.

[44] G.Dalman, *Jesus-Jeshua: Studies in the Gospels*, pp. 31-32. New York: Macmillan, 1929.

ஞானமில்லாமல்'' தர்க்கிப்பவர்களையும், தங்களுடைய போதனைகளை முரண்படுத்துகிற விதமாகப் பேசுகிறவர்களையும் அக்கால தத்துவ ஞானிகள் படிப்பறியாதவர்கள் என்றே விமர்சித்தனர்.[45] மேலும், யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ் என்பவரும்,[46] அப்போஸ்தலனாகிய பவுலும், சாதுர்ய ஞானமில்லாமல் பிரசங்கிப்பவனைக் கல்லாதவன் அதாவது படிக்காதவன் என்றே குறிப்பிட்டுள்ளனர்.[47] அதுமாத்திரமல்ல, கிறிஸ்தவரல்லாதவர்களும் இவ்விதமாகவே பவுலினால் அழைக்கப்பட்டுள்ளனர் (1கொரி.14:23).[48] இதனால்தான், அக்கால யூதமார்க்கப் போதனைகளுக்கு எதிராகப் பேசிய பேதுருவையும் யோவானையும் யூதர்கள் படிப்பறியாதவர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். எனினும், அவர்கள் ''நியாயப்பிரமாணத்தையும் யூதமார்க்க சட்டங்களையும் அறியாதவர்கள்'' என்னும் அர்த்தத்துடனேயே இச்சொற்பிரயோகம் உபயோகிக்கப்பட்டுள்ளது.[49] அதாவது, அவர்களுக்கு வேதபாரகர்களின் கல்வி இல்லாதிருந்தது என்பதையே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.[50] எனவே, பேதுருவும் யோவானும், ''யூதமதப் போதகர்கள் பயிலும் கல்விக்கூடத்தில் படிக்காத சாதாரண மக்கள்''[51] என்று யூதர்கள் கூறினார்களே தவிர, அவர்கள் எவ்வித கல்வியும் பெறாதவர்கள் என்பது இவ்வாக்கியத்தின் அர்த்தம் அல்ல.[52] மேலும், பேதுருவும் யோவானும் அக்கால ஆரம்ப கல்வியைப் பெற்றவர்களாக இருந்ததினால்தான், சபைகளுக்கு நிருபங்கள் எழுதக் கூடியவர்களாக இருந்தனர்.[53]

இயேசுகிறிஸ்துவின் காலத்தில் யூத சமுதாயம் எப்படி இருந்தது என்பதைப்பற்றிய அறிவற்ற நிலையில், அவருடைய சீடர்கள் படிப்பறிவற்றவர்கள் என்று பொதுவாகக் கிறிஸ்தவர்கள் தவறாக எண்ணுவதினால், தேவன் உலக ஞானமும் அறிவும் இல்லாதவர்களைத்தான் தம்முடைய ஆவியானவர் மூலம் உபயோகிக்கின்றார் என்னும் போதனை உருவாகியுள்ளது. உண்மையில், படிக்காதவனையும் தேவனால் ஊழியத்தில் உபயோகிக்க முடியும் என்றாலும், அவர் வேதாகமத்தை எழுதுவதற்கும் அதைப் போதிப்பதற்கும் படித்தவர்களையே உபயோகிக் கிறவராக இருக்கின்றார். இதனால்தான், வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களையும் எழுதும் ஆற்றலை மோசே பெறுவதற்காக, அவனை அற்புதமான விதத்தில் எகிப்திய அரண்மனையில் வளர்த்து, அக்காலத்தின் மிகச் சிறந்த கல்வியை அவன் பெறும்படி செய்தர். ஏனெனில், ''மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும், கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்'' என்று அப்போஸ்தலர் 7:22இல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அக்கால ''எகிப்திய பாடசாலைகள் எகிப்திய ஆலயங்களுடன் சம்பந்தப்பட்டவைகளாகவே இருந்தன. இவை எகிப்திய ஆலய ஆசாரியர்களினாலேயே நடத்தப்பட்டன. இவற்றில் எகிப்திய மதம், கணிதம், கவிதை, இசை, வானசாஸ்திரம், உட்பட பல பாடங்களும் எகிப்திய மற்றும் கானானிய மொழிகளும் கற்பிக்கப்பட்டன.[54] மேலும், மோசே எகிப்திய அரண்மனையில் வளர்ந்தினால் அரசகுமாரர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசாரியர்களே மோசேயின் ஆசிரியர்களாக இருந்தனர். எனவே, தேவனே அற்புதமான முறையில் மோசேயை எகிப்திய அரண்மனையில் வளருவதற்கு

---

45 Fitzmyer, *Acts: The Anchor Bible Commentary*, p, 302.

46 F.Josephus, *The Antiquities of the Jews*, 2.271.

47 2கொரிந்தியர் 11:6இல் ''நான் பேச்சிலே கல்லாதவனாயிருந்தாலும், அறிவிலே கல்லாதவனல்ல'' என்று பவுல் கூறும்போது, அக்கால தத்துவ ஞானிகளைப்போல தான் சாதுர்ய ஞானத்துடன் பிரசங்கிக்கவில்லை என்பதினாலேயே ''நான் பேச்சிலே கல்லாதவன்'' என்று குறிப்பிட்டுள்ளார். இதனால்தான், 1கொரிந்தியர் 1:17இல் இயேசுகிறிஸ்து தன்னை ''சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்'' என்றும், 1கொரிந்தியர் 2:1இல் ''சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

48 1கொரிந்தியர் 14:23இல் கல்லாதவன் என்னும் சொல் ''கிறிஸ்தவத்தை அறியாதவன்'' என்னும் அர்த்தத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது.

49 C.H.Dood, *The Interpretation of the Fourth Gospel*, p. 82; I.H.Marshall, *Acts: Tyndale New Testament Commentaries*, p. 101.

50 E.A.Judge, "The Early Christians as a Scholastic Community" In *Journal of Religious History* 1 (1960), pp. 4-15.

51 F.F.Bruce, *Acts: The New International Commentary on the New Testament*, p. 94; J.R.W.Stott, *Acts: The Bible Speaks Today*, p. 98; D..Peterson, *Acts: The Pillar New Testament Commentary*, p. 194; C.S.Keener, *Acts: An Exegetical Commentary Volume 2*, p. 1154.

52 D.J.Williams, *Acts: New International Biblical Commentary*, p. 83; W.L.Larkin, *Acts: The IVP New Testament Commentaries*, p. 75.

53 புதிய ஏற்பாட்டில் பேதுரு எழுதிய இரண்டு புத்தகங்களும் (1பேதுரு 2பேதுரு) யோவான் எழுதிய ஐந்து புத்தகங்களும் உள்ளன (சுவிசேஷம், மூன்று நிருபங்கள், வெளிப்படுத்தல்).

54 R.Gower, *The New Manners and Customs of Bible Times*, pp. 77-78.

வழிநடத்தியதினால், மோசே எகிப்திய ஆசாரியர்களிடம் படிப்பதை அனுமதித்தவறாகவும், பிற்காலத்தில் வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தங்களையும் எழுதுவதற்கு அவருடைய எழுத்தாற்றலை உபயோகிப்பவராகவும் இருந்துள்ளார்.

மோசேயைப் போலவே தேவனுடைய வெளிப்படுத்தல்களைப் பெற்ற தானியேலும் சிறந்த கல்விமானாக இருந்தார். ஏனெனில் அவர் கல்வி பயின்ற பாபிலோனியா அக்காலத்தில் உலகக் கல்வியின் மையமாக இருந்ததோடு, அங்கு பாபிலோனிய மொழி மாத்திரமல்ல, சட்டம், சமயம், புராணங்கள், மந்திரங்கள், வானசாஸ்திரம், சரித்திரம், கணிதம், ஆவியுலக விடயங்கள் என்று பலதரப்பட்ட பாடங்களும் கற்பிக்கப்பட்டன. இதனால், தானியேலும் அவனுடைய நண்பர்களும் இவையனைத்தையும் கற்றனர்.[55] இதைப்போலவே பவுலும் தான் பிறந்து வளர்ந்த தர்சு என்னும் பட்டணத்திலிருந்த (அப்.9:11,30, 11:25, 21:39, 22:3) மிகச் சிறந்த பல்கலைக்கழகத்தில் பயின்றவர். மேலும், தர்சு பட்டணம் அக்காலத்தில் வளமும் செல்வமும் நிறைந்த ஒரு பட்டணமாகவும், வர்த்தகம் கலாசாரம் கல்வி என்பவற்றின் மையமாகவும் இருந்ததோடு, அக்கால ரோம ராட்சியத்தில் இருந்த மூன்று பல்கலைக்கழகங்களில் ஒன்று இப்பட்டணத்தில் இருந்தது (மற்றவை அத்தேனேயிலும் அலெக்சாந்திரியாவிலும் இருந்தன),[56] எனவே, தானியேல், மோசே, பவுல் போன்றவர்கள், “தேவனை சேவிப்பதற்கு உலகக் கல்வியை எந்தளவுக்கு பயன்படுத்த முடியுமோ அந்தளவுக்குத் தங்களுடைய கல்வியை உபயோகித்துள்ளனர்.”[57] ஏனெனில், “உலகக் கல்வி கிறிஸ்தவர்களை அசுத்தப்படுத்துவதில்லை.”[58] ஆனால் தற்காலத்தில் சில கிறிஸ்தவர்கள், உலகக் கல்வியை உதாசீனப்படுத்துவதோடு, ஊழியப் பணிக்கு இது எவ்விதத்திலும் உபயோகப்படாது என்று கருதுகின்றனர். இதனால், இவர்கள் தங்களுடைய பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு ஊழியத்திற்கு வந்துவிடுகின்றனர். மேலும், உலகக் கல்வி இல்லாத நிலையில் பலர் தங்களுடைய ஊழியத்தில் பலதரப்பட்ட பிரச்சனைகளை சந்தித்துள்ளதோடு, தங்களுடைய அர்த்தமற்றதும் ஞானமற்றதுமான பிரசங்கங்களினால் பிறமதத்தினர் மத்தியில் இயேசுகிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப்படுவதற்குக் காரணமாக உள்ளனர். எனவே, பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துகிறார் என்பதற்காக உலகக் கல்வியையும், வேதாகமக் கல்லூரியின் படிப்பையும் நிந்திப்பதும், அவைகள் தேவையில்லை என்று அவற்றைப் புறக்கணிப்பதும், கிறிஸ்தவரல்லாதவர்கள் மத்தியில் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்வதற்கும், சுவிசேஷத்தைச் சரியான விதத்தில் விளக்கிக் கூறுவதற்கும், வேதாகம சத்தியங்களை சரியான விதத்தில் போதிப்பதற்கும் முடியாத பரிதாபமான நிலையையே தோற்றுவித்துள்ளது. உண்மையில், பரிசுத்த ஆவியானவர் தேவையில்லை என்னும் மனநிலையில் உலகக் கல்வியையும் வேதாகமக் கல்லூரியின் படிப்பையும் மாத்திரம் சார்ந்திருப்பதே தவறாகும். ஆனால் இவற்றை ஆவியானவரின் உதவியுடன் தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக உபயோகிக்கும்போது, நற்குணமுள்ள கிறிஸ்தவர்களாகவும் இயேசுகிறிஸ்துவுக்கு சிறந்த சாட்சிகளாகவும் வாழமுடியும்.

சில கிறிஸ்தவர்கள் 1கொரிந்தியர் முதலாம் அதிகாரத்தில் பவுல், “ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்” என்று குறிப்பிட்டுள்ளதை ஆதாரமாகக்கொண்டு, தேவன் மனிதர்களிடம் ஞானத்தை எதிர்பார்ப்பதில்லை என்று கருதுகின்றனர். ஆனால் இவர்கள் பவுல் இவ்வதிகாரத்தில் எதைப்பற்றி எழுதுகின்றார் என்பதைக் கருத்திற்கொள்ளாதவர்களாகவே இத்தகைய தவறான முடிவுக்கு வந்துள்ளனர். ஏனெனில், கொரிந்து சபை மக்கள் அக்காலத்தில் பிரபலமாயிருந்த கிரேக்க தத்துவங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாக இருந்தனர். இதனால் இவர்கள் கிறிஸ்தவ சுவிசேஷச் செய்தியை ஞானமற்ற உபதேசமாகக் கருதத்தொடங்கியதோடு, “சிறந்த வசனிப்பும் ஞானமும் அற்ற விதத்தில் பிரசங்கித்த பவுலைவிட (1கொரி.2:1)[59] அக்காலத் தத்துவ ஞானிகளைப்போல

---

[55] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 62.

[56] F.F.Bruce, *Places Jesus and Paul Knew*, pp. 69-70; W.M.Ramsay, *The Cities of St.Paul: Their Influence on His Life and Thought*.

[57] E.J.Young, *Daniel: The Geneva Series of Commentaries*, pp. 41-42.

[58] C.S.Keener, *Acts: An Exegetical Commentary Volume 2*, p. 1387.

[59] 1கொரிந்தியர் 2:1ல் பவுல், “சகோதரரே, நன் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை” என்று குறிப்பிட்டுள்ளார்.

“சாதுர்ய ஞானத்துடன்” பிரசங்கித்த அப்பொல்லோவையே[60] அதிகமாக விரும்பினார்கள்.[61] ஏனெனில், “சாதுர்ய ஞானம்” என்பது அக்கால கிரேக்க தத்துவ ஞானிகள் தங்களுடைய தத்துவ உபதேசங்களைத் தர்க்கரீதியாவும் ஞானத்துடனும் பிரசங்கித்த முறையாகும்.[62] ஆனால் பவுல், தான் இத்தகைய முறையில் பிரசங்கிக்கவில்லை என்றும், தான் கிரேக்க தத்துவ ஞானிகளைப்போல சாதுர்ய ஞானத்துடன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போய்விடும் என்றும் 1கொரிந்தியர் 1:17ல் குறிப்பிட்டுள்ளார்.[63] அதாவது, சுவிசேஷத்தை தத்துவ உபதேசம்போல பிரசங்கித்தால் மக்களுடைய கவனம் இயேசுகிறிஸ்து வின் சிலுவையின் பக்கம் செல்லாமல், தன்னுடைய வார்த்தை ஜாலங்களினதும் தர்க்கத் திறமையினதும் பக்கமாகவே செல்லும் என்பதைப் பவுல் இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.[64] மேலும், தேவன் தத்துவ ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தவர்களுக்குப் பைத்தியமாகத் தென்படுகிற சிலுவையைப்பற்றிய உபதேசத்தின் மூலமாகவே மக்களை இரட்சிக்கின்றார் என்பதை 21ம் வசனத்தில் சுட்டிக்காட்டுவதோடு,[65] 26 முதல் 31 வரையிலான வசனங்களில் தேவன் மக்களை இரட்சிக்கும்போது, உலகம் தத்துவ ஞானத்திற்கும் வல்லமைக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றவிதமாக ஞானிகளையும் பலசாலிகளையும் மாத்திரம் இரட்சிக்காமல், உலக மக்களால் ஞானமற்றவர்களாகவும் பலமற்றவர்களாகவும் கருதப்படுகிற வர்களையும் இரட்சிக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே 27ம் வசனத்தில் “ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவை களைத் தெரிந்துகொண்டார்” என்று குறிப்பிட்டுள்ளார்.[66] அதாவது, இரட்சிக்கப்படுவதற்கு ஞானிகளாக இருக்கவேண்டியதில்லை என்று பவுல் கூறுகிறாரே தவிர, கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும் ஞானம் அவசியமில்லை, நாம் நம்முடைய அறிவை உபயோகிக்கக்கூடாது என்று அவர் தெரிவிக்கவில்லை.

உண்மையில், வேதாகம சத்தியங்களைப் புரிந்துகொள்வதற்கு அறிவு அவசியம் என்பதே பவலின் போதனையாயிருந்தது. இதனால்தான், மெல்கிசேதேக்கு என்பனைப்பற்றி கூறும்போது, “இந்த மெல்கிசேதேக்கைப்பற்றி நாம் விஸ்தாரமாய்ப் பேசலாம். நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால், அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்” என்று தெரிவித்துள்ளார். ஏனெனில், அவர்கள் “கேள்வியில் மந்தமுள்ளவர்கள்” என்பது விஷயத்தைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் அளவுக்கு அறிவுள்ளவர்கள் அல்ல” என்பதாகும். இதனால்தான், புதிய மொழிபெயர்ப்பில், “நீங்கள் அறிவு மழுங்கியவர்களாகி விட்டதால், அவற்றை உங்களுக்கு விளக்குவது கடினம்” என்றும், இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் “நீங்கள் கற்றுக்கொள்வதில் மந்தமுள்ளவர்களாய் இருப்பதினால் இதை விளங்கப்படுத்துவது கடினமாயிருக்கிறது” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமாத்திரமல்ல, அறிவை உபயோகித்து சிந்திப்பவர்களினாலேயே

---

[60] அலெக்சாந்திரியா பட்டணத்தைச் சேர்ந்த அப்பொல்லோ என்பவன் சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமானவாக இருந்தான் என்பதை அப்போஸ்தலர் 18:24 அறியத்தருகின்றது. எகிப்தின் அலெக்சாந்தரியா பட்டணத்தில் யூதக் குடியிருப்பு அக்காலத்தில் இருந்ததோடு, கிரேக்கக் கல்வியினதும் தத்துவத்தினதும் மையமாக இருந்தது. இவ்வசனத்தில் “சாதுரியவான்” என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல், அப்பொல்லோ படித்தவனாகவும் அக்கால தத்துவ ஞானிகளைப் போல தர்க்கரீதியாகவும் ஞானமாகவும் பிரசங்கிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவனாகவும் இருந்துள்ளதையே அறியத்தருகின்றது (D.J.Williams, *Acts: New International Biblical Commentary*, p. 324; I.H.Marshall, *Acts: Tyndale New Testament Commentaries*, pp. 302-303).

[61] கொரிந்து சபையில் விசுவாசிகள், “நான் பவுலைச் சேர்ந்தவன், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன்” என்று தங்களுக்குள் பிரிவடைந்திருந்ததிற்கு இதுவே பிரதான காரணமாகும் (1கொரி.1:11-12, 3:4).

[62] G.D.Fee, *1Corinthians: The New International Commentary on the New Testament*, p. 64.

[63] 1கொரிந்தியர் 1:17ல், “ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார். கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு சாதுர்ய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்” என்று குறிப்பிட்டுள்ளர்.

[64] L.Morris, *1Corinthians: Tyndale New testament Commentaries*, pp. 42-43.

[65] 1கொரிந்தியர் 1:22ல் “தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று” என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

[66] இவ்வதிகாரத்தில் பவுல், தேவன் ஞானிகளையும் பலசாலிகளையும் இரட்சிப்பதில்லை என்றும் கூறவில்லை. 26ம் வசனத்தில் “சகோதரரே நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள் மாம்சத்தின்படி ஞானிகள் அநேகர் இல்லை” என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து இரட்சிக்கப்படவர்களில் பெரும்பாலானவர்கள் ஞானிகள் அல்ல என்பது தெளிவாகின்றது. அதேசமயம் இரட்சிக்கப்பட்டவர்களில் ஞானிகள் சிலரும் இருந்துள்ளதையும் இவ்வாக்கியம் அறியத்தருகின்றது (L.Morris, *1Corinthians: Tyndale New Testament Commentaries*, p. 47).

வேதாகமப் போதனைகளைப் புரிந்துகொள்ள முடியும் என்றும் தொடர்ந்து வரும் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (எபி.5:12-14).[67] மேலும், ‘‘தம்மை அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைத் தேவன் கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கவேண்டும்’’ (எபே.1:17) என்றும், அவர்கள் ‘‘எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்’’ (கொலொ.1:9) எப்பொழுதும் ஜெபிக்கிறவரா கவும் பவுல் இருந்ததோடு, ‘‘தான் போதிக்கிற கரியங்களை அறிவை உபயோகித்துப் புரிந்து கொள்ளும்படியும்’’ (2தீமோ.2:7) ‘‘அறிவற்றவர்களாக இருக்கவேண்டாம்’’ (எபே.5:17)[68] என்றும் கட்டளையிட்டுள்ளார். இதைப்போலவே, இயேசுகிறிஸ்துவும் பல்வேறுவிதமான கேள்விகளுடன் தம்மிடத்தில் வந்தவர்களிடமும், இல்லையென்றால் தாம் சொன்னதைப் புரிந்துகொள்ளாதவர்க ளிடமும், ‘‘நியாயம் இன்னதென்று நீங்களே தீர்மானியாமலிருக்கிறதென்ன?’’ (லூக்.12:57) ‘‘இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா?’’ (மாற்.8:17) என்றே கேட்டார். ஏனெனில், மனிதர்கள் தங்களுடைய அறிவை உபயோகித்து சிந்தித்து செயல்படவேண்டும் என்னும் எதிர்பார்ப்புடன் அவர் இருந்துள்ளார்.[69]

உண்மையில், ஞானம் தேவையற்றது என்பது வேதாகமப் போதனை அல்ல. ஏனெனில், தேவனைக் கருத்திற்கொள்ளாமல் வெறும் ஞானத்தை மாத்திரம் நம்பியிருப்பதே தவறு என்றே வேதாகமம் கூறுகிறது. இதனால்தான், ‘‘நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்’’ (சங்.32:8) என்று கூறும் தேவன், அறிவற்ற மிருகங்களைப்போல இருக்க வேண்டாம் என்று அடுத்த வசனத்தில் தெளிவாகத் தெரிவித்துள்ளார். அதாவது. ‘‘வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப் போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்’’ (சங்.32:9) என்று அறிவுறுத்தியுள் ளார். ஏனெனில், ஏனைய உயிரினங்களைப் போலில்லாமல், தேவன் மனிதனைத் தம்முடைய சாயலில், தம்மைப்போல சிந்தித்துச் செயல்படும் விதத்திலேயே சிருஷ்டித்துள்ளார்.[70] எனவே, நமக்கு ஞானம் தேவையில்லை, நாம் அறிவை உபயோகிக்கக்கூடாது என்றால், மூளையும், சிந்திக்கும் ஆற்றலும் இல்லாத நிலையிலேயே தேவன் நம்மை சிருஷ்டித்திருப்பார். ஆனால், நம்முடைய சரீரத்தில் தேவன் சிருஷ்டித்த எந்த ஒரு அவயவமும் தேவையற்றது என்று நம்மால் கூறமுடியாது. ஏனெனில், நாம் வாழ்வதற்கு அவசியமான அவயவங்களையே தேவன் நம்முடைய சரீரத்தில் வைத்துள்ளார். இவற்றில், மூளையும் ஒன்று. இதனால், நாம் முட்டாள்களாக அல்ல, மூளையை உபயோகித்து அறிவுடன் சிந்தித்து செயல்படவேண்டும் என்றே தேவன் எதிர்பார்க்கின்றார். இதனால்தான், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வேதாகம அறிவற்ற மக்களை நினைத்து வேதனைப்பட்ட தேவன். ‘‘என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள். நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன். நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன் (ஓசி.4:6) என்று வேதாகமத்தை மக்களுக்குப் போதிக்க வேண்டிய ஆசாரியர்களைக் கடிந்துகொண்டதோடு, ‘‘பேதைகளே, நீங்கள் பேதைமையை விரும்புவதும்… மதியீனரே, நீங்கள் ஞானத்தை வெறுப்பதும், எதுவரைக்கும் இருக்கும்’’ (நீதி.1:22) என்று கேட்பதோடு, ‘‘ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்’’ (நீதி.3:13) என்று தெரிவித்துள்ளார்.

வேதாகமக் கல்லூரிகள் தேவையில்லை என்று கூறுபவர்கள் சுட்டிக்காட்டும் முக்கியமான ஒரு வசனம் 1யோவான் 2:27 ஆகும். ஏனெனில், இவ்வசனத்தில், ‘‘நீங்கள் அவராலே பெற்ற

---

[67] எபிரெயர் 5:12-14இல், ‘‘காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானோந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[68] எபேசியர் 5:17இல், ‘‘ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[69] J.R.W.Stott, *Understanding the Bible*, p. 160.

[70] J.R.W.Stott, *Your Mind Matters: The Place of the Mind in the Christian Life*, pp. 13-16.

அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது'' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. உண்மையில், பரிசுத்த ஆவியானவரையே யோவான் இவ்வசனத்தில் அபிஷேகம் என்று குறிப்பிட்டுள்ளார்.[71] ஏனெனில், இவ்வசனத்தில் ''அபிஷேகம்'' என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள ''க்ரிஸ்மா'' (*chrisma*) என்னும் கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் யோவானால் மாத்திரமே உபயோகிக்கப்பட்டுள்ளது. மேலும், அபிஷேகம் என்னும் சொல் ஊற்றப்படுதல் என்னும் அர்த்தமுடையதாய் இருந்தாலும், யோவான் இச்சொல்லை இலக்கண ரீதியாக, ஊற்றப்படும் செயலை அல்ல ஊற்றப்படுகின்ற பொருளைக் குறிப்பிடும் விதத்திலேயே உபயோகித்துள்ளார்.[72] அதாவது, பரிசுத்தாவியானவர் அபிஷேகம் செய்கிறவராக அல்ல, அவரே அபிஷேகமாக இருக்கின்றார் என்பதையே யோவான் அறியத்தருகின்றார்.[73] எனவே, பரிசுத்தாவியானவரே அவர்களில் அபிஷேகமாக இருப்பதினால், அவரே அவர்களுக்கு எல்லாவற்றையும் போதிப்பார் என்றே யோவான் கூறுகிறார். ஆனாலும், பரிசுத்த ஆவியானவர் அவர்களில் இருப்பதினால், சபையில் போதக ஊழியம் தேவையில்லை என்று யோவான் கூறவில்லை. இதனால், யோவானின் கூற்றை சரியான விதத்தில் புரிந்துகொள்வதற்கு அவர் யாருக்கு எதற்காக இவ்வாறு எழுதியுள்ளார் என்பதை முதலில் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

''ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை'' என்னும் யோவானின் கூற்று, சபையில் போதக ஊழியம் தேவையில்லை என்னும் அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. ஏனெனில், யோவானுடைய வாசகர்கள் கூடிவரும் சபைகளில் வேதப்புரட்டு உபதேசங்கள் பரவிய காலத்திலேயே இந்நிருபம் எழுதப்பட்டுள்ளது. இதனால்தான், இதற்கு முந்திய வசனத்தில் ''உங்களை வஞ்சிக்கிறவர்களைக்குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்'' (1யோவா.2:26) என்று யோவான் குறிப்பிட்டுள்ளார். மேலும், யோவானின் வாசகர்கள் ஆரம்பத்தில் பவுலினாலும், அதன் பின்னர் தீமோத்தேயுவினாலும், கடைசியில் யோவானினாலும் போதிக்கப்பட்டவர்கள். ஏனெனில், சின்ன ஆசியாவிலிருந்த சபைகளுக்கு, குறிப்பாக எபேசு பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கே யோவான் இந்நிருபத்தை எழுதியுள்ளார். அதுமாத்திரமல்ல, பரிசுத்தாவியானவர் இவர்களில் இருந்ததினால், இவர்கள் சகல சத்தியங்களையும் சரியாக அறிந்திருந்தனர் (1யோவா.2:20-21). இதனால்தான், இவர்களுக்கு வேறு யாரும் சத்தியத்தைப் போதிக்கவேண்டியதில்லை என்று யோவான் குறிப்பிட்டுள்ளார். மேலும், தன்னுடைய வாசகர்கள் ''சகலத்தையும் அறிந்திருக்கிறார்கள்'' என்று யோவான் கூறும்போது, அவர்கள், கிறிஸ்தவ உபதேசங்கள் அனைத்தையும் முழுமையாக அறிந்திருக்கிறார்கள் என்னும் அர்த்தத்தில் இவ்வாறு எழுதவில்லை. ஏனெனில், யோவானுடைய எழுத்துகளில் சத்தியம் இயேசுகிறிஸ்துவைக் குறிப்பதினாலும், வேதப்புரட்டர்கள் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய அப்போஸ்தலர்களின் உபதேசத்தையே மறுதலித்து வந்தினாலும் ''இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சகல உபதேசங்களையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்'' என்றே யோவான் இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார்.[74] இதனால்தான், ''மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல'' (1யோவா.4:3) என்பதையும் யோவான் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், கிறிஸ்தவ மார்க்கத்தின் ஏனைய விஷயங்களில் அவர்களுக்குப் போதனைகள் தேவை என்பதை யோவான் மறுதலிக்கவில்லை. உண்மையில், யோவான் இந்நிருபத்தை எழுதுவதே அவர்களுக்கான ஒரு போதனையாகவே உள்ளது. இல்லையென்றால், பரிசுத்தாவியானவரே வேதப்புரட்டர்களின் போதனை தவறானது என்பதை அவர்களுக்கு உணர்த்தட்டும் என்று யோவான் பேசாமல் இருந்திருப்பார். அதாவது, மேய்ப்பர்களின் போதனைகள் சபை மக்களுக்குத் தேவையில்லை என்பது யோவானின் எண்ணமாயிருந்திருந்தால், தன்னுடைய மேற்பார்வையின் கீழ் இருந்த சபைகளுக்கு கிறிஸ்தவ மார்க்கத்தின் பல உபதேசங்களைக் கொண்டுள்ள இந்நிருபத்தை அவர் எழுதியிருக்கமாட்டார்.

---

[71] F.F.Bruce, *The Epistles of John*, pp. 71-72; D.L.Akin, *1,2,3John: The New American Commentary*, p. 347; D.W.Burdick, *The Letters of John the Apostle*, p. 197; G.M.Burge, *Letters of John: The NIV Application Commentary*, p. 128; J.R.W.Stott, *The Letters of John: Tyndale New Testament Commentary*, p. 111.

[72] A.E.Brook, *A Critical & Exegetical Commentary on the Johannine Epistles*, p. 55; B.F.Westcott, *Epistles of John*, p. 73.

[73] G.W.Derickson, *1,2,3John: Evangelical Exegetical Commentary*, p. 232.

[74] C.G.Kruse, *The Letters of John: The Pillar New Testament Commentary*, p. 108.

தற்காலத்தில் ஆராதனையை வழிநடத்துபவர்கள் ஒரு பாடலை பாடுவதற்குப் பல மணிநேரங்கள் பல தடவைகள் பாடிப்பாடி பயிற்சிபெற்ற பின்பே ஆவியானவர் அபிஷேகத்தில் வழிநடத்துகிறார் என்று கூறுகின்றனர். மேலும், பயிற்சி பெறாத வேறு ஒரு பாடலை பாடுங்கள் என்று சொன்னால் பயிற்சி போதாது பாடமுடியாது என்று கூறுகின்றனர். ஆனால், இவர்கள் வேதசத்தியத்தைப் பிரசங்கிப்பதற்கும் போதிப்பதற்கும் வேதாகமத்தை ஆராய்ந்து படிப்பதில் பயிற்சிபெறுவதற்கு வேதாகமக் கல்லூரிகளுக்கு செல்லவேண்டியதில்லை என்று கூறுவது முரண்பாடான கருத்தாகவே உள்ளது. ஏனெனில், ஒரு பாட்டைப் பாடுவதற்குப் பயிற்சி பெற்று சிறப்பாகப் பாடாவிட்டால், பாடலில் அபிஷேகம் இல்லை என்று கூறுகிறவர்கள், வேதத்தைப் போதிப்பதற்கு ஆராய்ச்சி தேவையில்லை என்று கூறுவது அர்த்தமற்றது. மேலும், தற்காலத்தில் சிலர் தீர்க்கதரிசனம் சொல்வதற்கும் பயிற்சி பெறுகின்றனர். இதற்காகப் பள்ளிகளையும் வைத்திருக்கின்றனர். ஆனால், வேதத்தைப் போதிப்பதற்கு மாத்திரம் படிப்பும் பயிற்சியும் தேவையில்லை ஆவியானவர் பேசுவார் என்று கூறுவது எவ்விதத்திலும் நியாயமானதாக இல்லை. மேலும், வேதாகமக் கல்லூரிகள் தேவையில்லை என்று எண்ணுபவர்கள் தங்களுக்கு ஆவியானவர் நேரடியாக எல்லாவற்றையும் போதிக்கிறார் என்று பெருமிதம் கொண்டாலும், இவர்கள் தங்களுடைய கற்பனையில் தாறுமாறானதும், தவறானதும், முரண்பாடானதுமான போதனைகளை உருவாக்குகிறவர்களாகவே உள்ளனர். அதுமாத்திரமல்ல, இன்றைக்கு இருக்கின்ற வேதப்புரட்டு உபதேசங்களும் ஆவியானவரின் நேரடியான வெளிப்படுத்தல் என்னும் அறிமுகத்துடனேயே வெளிவருகின்றன. இதனால், சரியான சத்தியம் எது என்பதை அறிந்துகொள்வதற்கு வேதாகமக் கல்லூரிகள் மிகமிக அவசியமானவைகளாக உள்ளன. ஏனெனில், வேதாகமக் கல்லூரிகள் எல்லாவிதமான போதனைகளையும் ஆராய்வதினால், எது சரி என்பதை வேதாகமத்தின் வெளிச்சத்தில் அறிந்துகொள்ளக்கூடிய ஆற்றலை நமக்குத் தருகின்றது.

## (3). போதகர்கள் முறையாகப் போதிக்கவேண்டும்

இயேசுகிறிஸ்துவே நம்முடைய மேய்ப்பராக இருந்தாலும் (யோவா.10:11),[75] அவரை நாம் பின்பற்றும்போது, நம்மைத் தம்முடைய சரீரமாகிய சபையின் ஒரு அவயவமாக்கி,[76] தம்மைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரு மேய்ப்பரையும் நமக்குத் தருகின்றார். இதனால், நம்முடைய சபையின் மேய்ப்பர் நம்முடைய ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம் பண்ணுகிறவராய் இருப்பதினால் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கும்படி தேவன் அறிவுறுத்தினாலும் (எபி.13:17),[77] மேய்ப்பர்கள் தங்களுக்கு கீழாக இருக்கும் மந்தையை மேய்ப்பதில் கவனமாயிருக்கும்படி (அப்.20:28, 1பேது.5:2-3)[78] எச்சரிக்கப்பட்டுள்ளனர். இதனால்தான், தேவனுடைய மந்தையை

---

75 யோவான் 10:11இல் "நானே நல்ல மேய்ப்பன்" என்று இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி தெரிவித்துள்ளார்.

76 கிறிஸ்தவர்களாகிய நாம் சபையாக இருப்பது மாத்திரமல்ல, சபையாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் சரீரமாகவே இருக்கின்றோம். இதனால்தான், "சபையாகிய சரீரம்" (கொலொ.1:18), "சரீரமான சபை" (எபே.1:23) என்னும் சொற்பிரயோகங்கள் சபையைக் குறிப்பிட வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன. ஏனெனில், இரட்சிக்கப்படும் மக்களைச் சபையில் சேர்க்கும் இயேசுகிறிஸ்து (அப்.2:47), அவர்களைத் தம்முடைய சரீரத்தின் அவயவங்களாக்குவதின் மூலமாகவே சபையைக் கட்டிவருகின்றார். இதனால்தான், "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறீர்கள்" (1கொரி.12:27) என்றும், "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபே.5:30) என்றும், "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாய் இருக்கிறோம்" (ரோ.12:5) என்றும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, "நாம் தொலை தூரத்திலிருந்து இயேசுகிறிஸ்துவோடு தொடர்பு கொள்கிறவர்களாக அல்ல, பிரிக்க முடியாதபடி அவரோடு இணைந்துவிட்ட அவருடைய சரீரத்தின் ஒரு பகுதியாகவே இருக்கின்றோம்." இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையைப்பற்றி வேதாகமம் போதிக்கும் சத்தியங்களை முழுமையாக அறிந்துகொள்வதற்கு விரைவில் வெளிவரும் எனது "திருமறை போதிக்கும் திருச்சபை" என்னும் நூலைப் பார்க்கவும்.

77 எபிரெயர் 13:17இல், "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

78 அப்போஸ்தலர் 20:28இல் "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்றும், 1பேதுரு 5:2-3இல், "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்" என்றும் மேய்ப்பர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேய்க்கும் பொறுப்பில் இருக்கும் மேய்ப்பர்கள் “சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கும்படி” (2தீமோ.2:15)[79] அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்வசனத்தில் “நிதானமாய்ப் பகுத்துப் போதித்தல்” என்பது பல வேதாகமங்களில் “சரியாகக் கையாள்தல்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[80] ஆனால், புதிய தமிழ் மொழிபெயர்ப்புகளில் “திரிபின்றி போதித்தல்”[81] “நேர்மையாய்ப் போதித்தல்”[82] “சரியான வழியில் போதித்தல்”[83] “நேர்மையாய்ப் பகுத்துக் கூறுதல்”[84] “சரியாகப் பகுத்துக் கூறுதல்”[85] என்று பலவாறு மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. மேலும், நம்முடைய மொழிபெயர்ப்பில் இருக்கும் “பகுத்துப் போதித்தல்” என்னும் சொற்பிரயோகம் ஜேம்ஸ் அரசனுடைய வேதாகமத்திலுள்ள “சரியாகப் பிரித்துப் போதித்தல்” என்பதின் தமிழாக்கமாகும். எனினும், “சரியாக விளக்குதல்” (NLT) “சரியாகப் போதித்தல்” (HCSB, NRSV) என்னும் மொழிபெயர்ப்புகள், பவுலின் அறிவுறுத்தலை நமக்கு தெளிவாகப் புரிய வைக்கின்றன. அதாவது, மேய்ப்பர்களாக இருப்பவர்கள் “வேதாகம சத்தியத்தை சரியான விதத்தில் முறைப்படி வியாக்கியனம் செய்து தெளிவாக விளக்கிப் போதிக்க வேண்டியது அவசியம்.”[86] அதாவது, வேதப்புரட்டர்களைப்போல மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்துகிறவர்க ளாக இராமல், வேதவசனங்களின் அர்த்தத்தை நேரடியாக அறிவிக்கின்றவர்களாக இருக்க வேண்டும்.[87] இதற்கு வேதாகமக் கல்லூரிகள் பெரிதும் உதவுகின்றன.

வேதாகமம் தமிழ் மொழியில் நம்மிடம் இருந்தாலும், இதில் பழைய ஏற்பாடு எபிரெய மொழியிலும், புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலுமே எழுதப்பட்டது. மேலும், தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகள் நீண்டகாலத்தின் பின்பே வெளிவந்தன.[88] இதனால், பல சொற்கள் வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் என்ன அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டன என்பதை சாதாரண கிறிஸ்தவர்கள் அறியாதவர்களாகவும், தவறாகப் புரிந்துகொள்கிறவர்களாகவுமே இருக்கின்றனர். மேலும், இவர்கள் வேதாகமத்தின் மூலமொழிகளை அறிந்துகொள்வதின் அவசியத்தை அறியாதவர்களாகவும் அது அவசியமற்றது என்று எண்ணுகிறவர்களாகவுமே இருக்கின்றனர். ஆனால் இது மிகவும் தவறான ஒரு கருத்தாகும். ஏனெனில், ஒரு புத்தகத்தை சரியான விதத்தில் புரிந்துகொள்வதற்கு அது என்ன மொழியில் எழுதப்பட்டதோ அந்த மொழியின் அறிவு ஓரளவுக்கு இருக்கவேண்டியது அவசியம். ஏனெனில், மூலமொழியில் ஒரு புத்தகத்தை வாசிப்பதற்கும் அதன் மொழிபெயர்பை வாசிப்பதற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. இதனால், வேதாகமம் மாத்திரம் இதற்கு விதிலக்கு என்று கூறமுடியாது. ஏனெனில் மூலமொழியில் ஒரு சொல்லுக்கு இருக்கும் முழுமையான அர்த்தத்தை மொழிபெயர்ப்பில் ஒரு சொல்லினால் எவ்விதத்திலும் கொண்டுவர முடியாது. இதனால்தான், வேதாகமத்தில் குறிப்பிட்ட ஒவ்வொரு சொல்லும் வித்தியாசமான மொழிபெயர்ப்புகளில் வித்தியாசமான சொற்களில் குறிப்பிட்டுள்ளன. உதாரணத்திற்கு புலம்பல் 3:22இல் தமிழில் கிருபை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் ஆங்கில வேதாகமங்களில் “இரக்கம்” (KJV, NASB, DRB, ERV) “பேரன்பு” (NIV) “உண்மையுள்ள அன்பு” (NLT, HCSB) “உறுதியான அன்பு” (ESV) “இரக்கமுள்ள அன்பு” (ASV) “மாறாத அன்பு” (GNT) “கிருபையுள்ள அன்பு” (ISV) என்று பலவாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனினும், புதிய ஏற்பாட்டில் கிருபை என்பற்கு “காரிஸ்” என்னும் சிறப்பான ஒரு சொல் உள்ளது. ஆனால், எபிரெய மொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள “ஹீஸ்ட்”

---

[79] 2தீமோத்தேயு 2:15இல், “நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு” என்று பவுல் தீமோத்தேயுவுக்கு கட்டளையிட்டுள்ளார்.

[80] உதாரணத்திற்கு ஆங்கிலத்தில் NIV, TNIV, ESV, BST, BLT, NASB, ASV, DRB, ERV, ISV என்னும் மொழிபெயர்ப்புகளில் இவ்விதமாக உள்ளது.

[81] ராஜரீகம் மொழிபெயர்ப்பு.

[82] மோனஹறன் மொழிபெயர்ப்பு.

[83] பரிசுத்த பைபிள்.

[84] திருவிவிலியம்.

[85] புதிய இலகு தமிழ் மொழிபெயர்ப்பு.

[86] T.D.Lea & H.P.Griffin, *1,2Timithy Titus: The New American Commentary*, p. 215; P.H.Towner, *1-2Timothy & Titus: The IVP New Testament Commentary*, p. 182.

[87] P.H.Towner, *The Letters to timothy and Titus: The New International Commentary on the New Testament*, p. 522; G.W.Knight III, *The Pastoral Epistles: The New international Greek Testament Commentary*, p. 412.

[88] வேதாகமம் எழுதப்பட்டு மொழிபெயர்க்கப்பட்ட முழுமையான வரலாற்றை அறிந்துகொள்வதற்கு எனது “புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு” என்னும் நூலைப் பார்க்கவும்.

என்னும் சொல், வித்தியாசமான ஆங்கில மொழிபெயர்ப்புகளில் உள்ள சொற்களின் அர்த்தங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், இவற்றைவிட அதிக அர்த்தமும் ஆழமும் உள்ள அன்பாக உள்ளது. மேலும், புதிய ஏற்பாட்டில் "அகாபே" என்னும் கிரேக்கச் சொல் 1கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தில் அன்பைப்பற்றி பவுல் எழுதியுள்ள அத்தனை விஷயங்களையும் உள்ளடக்கிய அன்பாக உள்ளது. இதைப்போலவே, வேதாகமத்தின் பெரும்பாலான சொற்கள் அது எழுதப்பட்ட எபிரெய கிரேக்க மொழிகளில் அதிக ஆழமும் அர்த்தமும் உள்ள சொற்களாய் உள்ளன. இதனால், இவற்றையெல்லாம் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் ஓரிரு சொற்களில் குறிப்பிட்டுள்ளதினால் பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு வேதாகம சத்தியங்களை முழுமையாக அறிந்துகொள்ள முடியாமல் உள்ளது. இதனால்தான், வேதாகமக் கல்லூரிகளின் படிப்பு மிகவும் அவசியமாய் உள்ளது.

வேதாகமக் கல்லூரிக்குச் செல்லாதவர்கள், வேதாகமம் எழுதப்பட்ட மூலமொழிகளின் அர்த்தத்தை அறிந்துகொள்ள முற்படாமல் ஆவியானவரின் வெளிப்பாடு என்னும் அறிமுகத்துடன் பிரசங்கித்தாலும், பெரும்பாலும் அவர்கள் தங்களுடைய குறுகிய அறிவையும் அனுபவத்தையும், அதுவரை காலமும் கேட்ட வேறு செய்திகளையும், பாரம்பரிய நம்பிக்கைகளையும் ஆதாரமாகக் கொண்டே போதிக்கின்றனர். இதனால்தான், தவறான போதனைகளும் ஒன்றுக்கொன்று முரணான செய்திகளும் அன்றாடம் வந்துகொண்டேயிருக்கின்றன. அதேசமயம், தற்காலத்தில் வேதாகமக் கல்லூரிகளில் படித்தோம் என்று கூறுபவர்களிலும் சிலர், எதுவுமே படிக்காதவர்களைப்போல ஒவ்வொரு வசனத்திற்கும் ஆழமான அர்த்தம் கற்பிக்கின்றோம், எவருக்கும் தெரியாத மறைபொருட்களை வெளிப்படுத்துகிறோம் என்று கூறி, வேதாகம சத்தியத்தையே தாறுமாறாக்குகின்றனர். ஏனெனில், இவர்கள் சரித்திர சம்பவங்களையெல்லாம் உருவக அல்லது உவமைக் கதைகளாக மாற்றி வேதாகமத்தில் தேவன் என்ன சொல்கின்றார் என்பதையே அறிய முடியாத அவலமான நிலையை ஏற்படுத்தியுள்ளனர். இதற்கு சிறந்த உதாரணமாக இருப்பது நான்காம் நூற்றாண்டில் ஒரிகன், ஒகஸ்டீன் என்னும் சபைத் தலைவர்களினால் நாசமாக்கப்பட்ட நல்லசமாரியன் உவமையின் போதனையாகும். அதாவது, எகிப்திலுள்ள அலெக்சாந்திரியா என்னும் பட்டணத்து கிரேக்கர்கள் புராணக் கதைகளை வியாக்கியானம் செய்த முறையின்படி வேதாகம வசனங்களுக்குத் தங்களுடைய மனதில் தோன்றிய அர்த்தங்களைக் கொடுத்து, வேதாகம சத்தியத்தையே அறிய முடியாத நிலையை ஏற்படுத்தியவர்களே ஒரிகன் ஒகஸ்டீன் என்னும் பிரபலமான சபைத் தலைவர்கள். ஏனெனில், நல்ல சமாரியன் உவமையை இயேசுகிறிஸ்து எதற்காகச் சொன்னார் என்பதை எவராலும் அறிந்துகொள்ள முடியாத விதத்தில், அதில் இருக்கின்ற ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தத்தை இவர்கள் கொடுத்துள்ளார். இத்தகைய தவறான அர்த்தம் இன்று வரை கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரபலமாய் உள்ளது. இதனால், "பிறன் யார்?" என்று கேட்ட மனிதனுக்கு (லூக்.10:28),[89] அவனுடைய கேள்விக்கான பதிலை அவனே கண்டுபிடிக்கும் விதத்தில் சொல்லப்பட்ட நல்ல சமாரியன் உவமையில்,[90] இச்சத்தியத்தையே கண்டுபிடிக்க முடியாதபடி இதில் இருக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், இவ்வுவமையில் எரிகோ, எருசலேம், சமாரியன், கள்ளன், வஸ்திரம், காயம், லேவியன், ஆசாரியன், எண்ணெய், திராட்சைரசம், வாகனம், சத்திரம், பணம் என்பவைகள் எவற்றைக் குறிக்கின்றன என்பதை அறிந்துகொள்வது இவ்வுவமை சொல்லப்பட்டதன் நோக்கம் அல்ல. ஒரிகன் ஒகஸ்டீன் என்போரைப் பின்பற்றும் தற்கால பிரசங்கிகள் சொல்லும் அர்த்தங்கள் எல்லாம் இவ்வுவமையில் இருக்கும் நபர்களுக்கும் பொருட்களுக்கும் இருக்கின்றது என்றால், இயேசுகிறிஸ்து இவ்வுவமையைச் சொல்லி முடித்தவுடன், இவைகளெல்லாம் எவற்றைக் குறிக்கின்றன? என்று கேட்டிருப்பார். ஆனால், அவர் இவ்வாறு கேட்காமல், "இப்படியிருக்க, கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது" (லூக்.10:36) என்றே கேட்டார். ஏனெனில், பிறன் யார் என்னும் கேள்விக்கான பதிலாகவே இவ்வுவமையை இயேசுகிறிஸ்து கூறினார் என்பது, உவமையின் முடிவில் அவர் கேட்கும் இக்கேள்வியிலிருந்து தெளிவாகிறது.

---

[89] நித்திய ஜீவனை சுதந்தரிப்பதற்கு என்ன செய்யவேண்டும்? என்னும் கேள்விக்கான பதிலை இயேசுகிறிஸ்துவிடமிருந்து அறிந்துகொண்ட மனிதன், லூக்கா 10:29இல், "தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி: எனக்குப் பிறன் யார் என்று கேட்டான்."

[90] லூக்கா 10:29இல் கேட்கப்பட்ட கேவிக்கான பதிலாகவே 30ஆம் வசனத்திலிருந்து 35 வரையிலான வசனங்களில் உள்ள நல்ல சமாரியன் உவமை சொல்லப்பட்டுள்ளது.

எனவே, மறைபொருட்களைக் கொண்டுவரும் பிரசங்கிகள் கூறுகின்ற விதமாக “இவ்வுவமை மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிலான உறவைப்பற்றி அல்ல, மனிதர்களுக்கிடையிலான உறவைப்பற்றிய போதனையாகவே உள்ளது.”[91]

நான்காம் நூற்றாண்டில் ஒரிகன் ஒகஸ்டீன் என்போர் அறிமுகப்படுத்திய தவறான வேத வியாகியான முறை வேதாகமத்தின் எல்லா பகுதிகளையும் மறைபொருட்கள் கொண்ட கதைகளாக மாற்றியுள்ளது. இதனால், வேதாகம சத்தியங்களை மனிதருக்குப் போதியாமல், ஒவ்வொன்றுக்கும் கற்பனையில் ஒவ்வொரு அர்த்தத்தைக் கொடுத்துவிட்டு, ஆவியானவர் தங்களுக்கு மறைபொருட்களை வெளிப்படுத்துகிறார் என்று பெருமிதம் கொள்பவர்களாகப் பெரும்பாலான பிரசங்கிகள் மாறி விட்டனர். இதனால்தான், பழைய ஏற்பாட்டில் சிவப்பு நிறம் வரும் வேதவசனங்களையெல்லாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தமாகவும், இரண்டு பொருட்கள் இருக்கும் இடத்திலெல்லாம் அதை சிலுவையின் இரண்டு மரத்துண்டுகள் என்றும், மூன்று பொருட்கள் உள்ள வசனங்களையெல்லாம் திரித்துவமாகவும் மாற்றியுள்ளனர். அதுமட்டுமல்ல, எதை சாப்பிடலாம் எதைச் சாப்பிடக்கூடாது என்பதை அறியத்தரும் பழைய ஏற்பாட்டு உணவு சட்டத்தைக்கூட விட்டுவைக்காமல், அதிலும் மறைபொருட்களைக் கண்டுபிடித்து அதை ஒரு பாவப்பட்டியலாக மாற்றி, பன்றி பெருந்தீனியையும் கழுகு அநீதியையும், பருந்து களவையும் காகம் பேராசையையும் குறிப்பதாக விளக்கினார்கள்.[92] இதைப்போலவே வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மறைபொருள் அர்த்தத்தைக் கொடுத்துள்ளனர். உண்மையில், வேதாகமத்தில் தரிசனங்களில் காண்பிக்கப்படும் பொருட்களுக்கும், சில உவமைகளுக்கும் மாத்திரமே மறைபொருட்கள் உள்ளன. அனாலும் தரிசனங்களிலும் உவமைகளிலும் உள்ள மறைபொருட்களுக்கான அர்த்தங்கள் வேதாகமத்திலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதனால்தான், பாபிலோனிய அரசன் கண்ட தரிசனத்தின் மறைபொருட்கள் தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்டன. தானியேல் கண்ட தரிசனங்களில் அவனால் புரிந்துகொள்ள முடியாமல் இருந்த மறைபொருட்கள் தேவதூதனால் விளக்கப்பட்டுள்ளதை தானியேலின் புத்தகத்தை முழுமையாக வாசித்தால் அறிந்துகொள்ளலாம். இதைப் போலவே மறைபொருட்கள் உள்ள விதைப்பவனுடைய உவமைக்கு விளக்கங்கள் இயேசு கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இயேசுகிறிஸ்து விளக்கம் கொடுக்காத உவமைகள் மறைபொருட் கதைகளாக அல்ல, உதாரணக் கதைகளாகவே சொல்லப்பட்டுள்ளன. அதாவது, நாம் ஏற்கனவே பார்த்தவிதமாக நல்ல சமாரியன் உவமை பிறன் யார் என்பதை அறியத்தரும் ஒரு உதாரணக் கதையாகவே உள்ளது. இது மறைபொருட்கள் உள்ள ஒரு கதை அல்ல. வேதாகமம் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தைக் கொண்ட புத்தகமாக இருப்பதினால், இதில் மறைபெருட்களைக் கண்டுபிடிக்கிறேன் என்று வேதாகமத்தில் சொல்லப்படாததையெல்லாம் அதில் இருப்பதாகப் போதிப்பது வேதாகம சத்தியத்தையே தாறுமாறாக்கும் தவறான போதனையாகும்.

கி.பி.16ஆம் நூற்றாண்டில் சபையில் சீர்த்திருத்தம் ஏற்படும் வரை, வேதாகமத்தின் நடைமுறை செய்திகளை அறிந்துகொள்ள முற்படாமல், வேதாகமத்தை ஒரு மந்திரப் புத்தகம் போலவே கிறிஸ்தவர்கள் உபயோகித்துள்ளனர். இதனால்தான், “சபை சீர்திருத்தத்தின் மகத்தான வெற்றி, வேதாகமம் எழுதப்பட்ட மொழிநடையின் அடிப்படையில் அதை வியாக்கியானம் செய்யும் முறையிலேயே கிடைத்தது.”[93] ஏனெனில், வேதாகமத்தின் ஒவ்வொரு சம்பவத்திற்கும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் இடத்துக்கும் இலக்கத்திற்கும் எழுத்துக்கும் என்ன மறைபொருள் அர்த்தம் இருக்கின்றது என்பதைக் கண்டுபிடிப்பதற்காகத் தேவன் தம்முடைய வார்த்தையைக் கொடுக்கவில்லை. ஏனெனில், வேதாகமத்தின் செய்தியை நாம் நேரடியான அர்த்தத்தில் புரிந்து கொள்ளக்கூடிய விதமாகவே வேதாகமம் எழுதப்பட்டுள்ளது. இதனால்தான், “நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள் நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக,

[91] G.D.Fee & D.Stuart, *How to Read the Bible for All Its Worth*, p. 124
[92] R.B.Zuck, *Basic Bible Interpretation: A Practical Guide to Discovering Biblical Truths*, p. 36.
[93] R.C.Sproul, *Knowing Scripture*, p. 53.

அது வானத்திலுள்ளதும் அல்ல. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள் நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல'' (உபா.30:11-13) என்று தேவனே தெளிவாகத் தெரிவித்துள்ளார். எனவே, ஒவ்வொரு எழுத்திலும் ஒளிந்திருக்கும் மறைபொருளைத் தேடுகிறேன், அவற்றின் மர்மத்தை வெளிப்படுத்துகிறேன் என்று கற்பனையில் புதுப்புது அர்த்தங்களைக் கொண்டுவராமல், வேதாகமத்தின் பின்னணி, கலாசாரம், மொழிநடை, சொற்களின் அர்த்தம் என்பவற்றை அறிந்து வேதாகமத்தை ஆவியானவரின் உதவியுடன் ஆராய்ந்து படிக்கவேண்டும். எனினும், இத்தகைய பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு வேதாகமக் கல்லூரிகள் தேவைப்படுகின்றன. எனவே, வேதாகமக் கல்லூரிகள் வேலைக்குதவாத வெறும் கல்லுகளாக அல்ல, அவை தேவனுடைய வார்த்தையை நாம் சரியானவிதத்தில் புரிந்துகொள்ள உதவிடும் ஆவியானவரின் கருவிகளாகவே உள்ளன.